# முதுசமில்லை

கவிஞர் மணி



T
891.481 01
M 314 M

T.
891.481
01
M314 M

CATALOGUED

ப. மணியின்

# முதல் மின்னல்

காவ்யா

முதற்பதிப்பு : டிசம்பர், 1987

© ப. மணி

முதல் மின்னல்

கவிதைகள்

வெளியீடு : லெட்சுமி சுந்தரம்

அட்டை : எஸ். எஸ்.

அச்சு : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-600 014

T
891.481 01
M314 M

INDIAN INSTITUTE
Acc. No. 89988
16-7-98

Library IIAS, Shimla
T 891.481 01 M 314 M
00089988

விலை ரூ. 10

KAAVYA,
8, SHASTRINAGAR II CROSS,
INDRANAGAR,
BANGALORE-560038.

# பதிப்புரை

கவிஞர் மணி

தொலை அலுவலக ஊழியர்
கவி உலகில் புதுமொட்டு.
சிறகு விரிக்கத் துடிக்கும்
இளஞ்சிட்டு.

இவரது மின்னல் முதலானது
மின்னலுக்குப்பின்
இடியோ மழையோ
எது வேண்டுமானாலும் வரும்.

இவர்
அடியெடுத்து வைக்க
காவ்யா இவருக்கு
கம்பளம் விரித்துள்ளது.

கவி வானில்
இவரது மின்னல்கள்
கவனிக்கப்படட்டும்

—காவ்யா

கவியரசு வைரமுத்துவின்

# அணிந்துரை

மழை பொழிகிறது.
எல்லோரும்தான் கேட்கிறார்கள்.

ஆனால், அதற்குள் ஒரு சங்கீதமிருப்பதை கவிஞனின் காது மட்டுமே கண்டுபிடிக்கிறது.

ஒரு மொட்டு மலர்கிறது.
எல்லோரும்தான் பார்க்கிறார்கள்.

ஆனால், அதற்குள் ஒரு பிரபஞ்சத்தின் ரகசியத்தை கவிஞனின் கண்கள் மட்டுமே கண்டு பிடிக்கின்றன.

எங்கோ ஒரு கண்ணீர்த்துளி சிந்தப்படுகிறது.
எல்லோரும்தான் கவனிக்கிறார்கள்.

ஆனால், கவிஞனின் பேனா மட்டும்தான் அந்தக் கண்ணீருக்கான காரணத்தையும், அந்தக் காரணத்தைக் களையவேண்டிய ஆயுதத்தையும் கண்டுபிடிக்கிறது.

எனவே கவிதையென்பது மொழியின் அலங்கார மாக மட்டும் நின்றுவிடாமல் வாழ்க்கையின் அங்க மாக ஆகிவிடுகிறது.

இந்த 'முதன் மின்னல்' கவிதைத் தொகுதியை வெளியிட்டிருக்கும் இளங்கவிஞர் ப. மணி வளர்ந்து வருகின்ற கவிஞர்களின் வரிசையிலே கொள்ளத் தக்கவர்.

ஆர்வமும் புதியன புனைய வேண்டுமென்ற வெறியும் கொண்ட இந்தக் கவிஞரின் தொகுப்பு வாசிக்கவும் யோசிக்கவும் கூடிய வரிகளைக் கொண் டிருக்கிறது.

தொகுப்பெங்கும் அங்கங்கே மின்னல்கள் தெறிக் கின்றன.

நிகழ்காலத்தைப் பற்றி நிறைய எழுதியிருக் கிறார். எழுத எழுத இன்னும் இவருக்கு வளமான கவிதைகள் வருமென்பது திண்ணம்.

இந்த 'முதல் மின்னல்' நாளை முழு நிலவாய் வளருமென்பது என் எண்ணம்.

சென்னை-24
15-12-87

வாழ்த்துக்களோடு ..
**வைரமுத்து**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அநுபவ அலைகள் | 9 |
| 2. | சபதம் | 14 |
| 3. | காலைப் பொழுதினிலே | 16 |
| 4. | சாலை அழகு | 19 |
| 5. | நிழலின் அழகு | 21 |
| 6. | குயில் | 22 |
| 7. | முருகப் பெருமானே | 24 |
| 8. | இரத்தப் பூக்கள் | 25 |
| 9. | இயற்கைக் கலைஞன் | 27 |
| 10. | அந்தோ என் தோழன் | 28 |
| 11. | புலம்பல் | 29 |
| 12. | ஒன்று | 30 |
| 13. | மதமாற்றம் | 33 |
| 14. | தாளம் தப்பல்ல | 34 |
| 15 | வள்ளண்மை | 35 |
| 16. | பசி | 36 |
| 17. | முதல் மின்னல் | 37 |
| 18. | காதல் உதயம் | 38 |
| 19. | அவளின் தோழிகள் | 39 |
| 20. | திருமண அழைப்பு | 40 |
| 21. | வெறுத்தவன் குரல் | 42 |
| 22. | ஆண்பரத்தை | 43 |
| 23. | சரித்திரம் குமுறும் | 45 |
| 24. | முனைவர் சு. சண்முகசுந்தரம் | 47 |
| 25. | சிறுகதை வேந்தன் க. சமுத்திரம் | 49 |
| 26. | காற்றின் பயணம் | 51 |

27. தாலாட்ட வேண்டாம் 53
28. சுடரில்லா விளக்கு 54
29. துளி காற்று 56
30. மௌனியின் ரசிகன் 58
31. ஆறாத நோய் 59
32. வறுமையின் சட்டம் 60
33. சத்தமில்லா சங்கீதம் 63
34. நெருப்புக் காவியம் 65
35. பைத்தியக்காரி 68
36. வாழ்க பாரதம்! 70
37. துணிவில்லா மனிதர்கள் 72
38. தாகம் 73
39. கலங்காதே நிலவே! 74
40. பிரிவை பிரார்த்திக்கிறது 76
41. கொடி மரத்துக்கு மட்டுமே 77
42. எச்சரிக்கை 78
43. பேனாவின் சாயம் 80
44. அறிமுகம் 81
45. கவிஞனின் உலகம் 82
46. மடை மாற்றம் 84
47. கவிக்கு மட்டும் 86
48. பேனாக் குயில் 87
49. இயற்கையும் மௌனி! 88
50. என் பேனா பேசுகிறது 89
51. எங்கே நான் 91
52. சரிபார்ப்பது தான் 92
53. கிழக்கு ஏன் சிவக்கிறது? 94
54. அமைதிக்கு ரத்தத் தாகம் 95

## அநுபவ அலைகள்

உள்ளே இருப்பவை—

அநுபவச் சுவடுகள்—அணையா தீபங்கள்
சிந்தனைச் சித்திரங்கள்
சிரித்தே இருக்கும் நவரசப் பூக்கள்

பிஞ்சு ரத்தத்தின் உணர்ச்சிச் சிதறல்கள்
உன்னதக் கோலங்கள்
உயிர்ச் சுடரின் குழந்தைகள்!

ஓயாத அலைகள் ஓய்ந்து விட்டாலும்
காயாத பூக்கள் இவை!

கனியாத இளமையின் அர்த்தமுள்ள பிச்சி கானங்கள்
வணிகவியல் மாணவனின் கலையியல் கண்காட்சி!

அமைதிப்புயல் — ஆரவாரப் பூக்கள்
வார்த்தைச் சிற்பங்கள்! வனமோன ராகங்கள்!

கத்தூரி கன்னடத்து கன்னித் தமிழ் மகனின்
கண்ணியக் காற்றலைகள்
மொத்தத்தில்
விழிகள் வியந்த போது
மொழி அதை விளக்கியது
ஆம்! உண்மையில் எல்லாம் கவிதைகள்!

இதன் இதயங்களில்—
என் ரத்தத்தோடு சப்தம் போடும் உணர்ச்சி,
நெருப்பு மலராய்ப் பூத்திருக்கு.
சில—எனக்காகவே எழுதிவைத்த என் பிம்பங்கள்
உலக உயிர்களெல்லாம் ஒன்றே என எண்ணும்
சின்னவனின் சித்தாந்த ரேகைகள்!

உங்களோடு நானும் என்னோடு நீங்களும்
கலக்க வந்த உயிர்க்கோலங்கள்

நான்—
சூரியனிடம் சபதமிட
என்னிடம் வார்த்தைகள் நடனமிட
வண்ண வண்ணக் கற்பனைகள் வாலிப்புச் சிலுப்பிட
எண்ணி யெண்ணிப் பார்க்கிறேன். எங்கே நான்?

நெஞ்சம் பிளந்துவிடும்
நெருக்கடி நேரத்தில்—எழுதிய பின்
என்னைத் தொலைத்துக் கொண்டு
எத்தனையோ நேரம் கழித்து திரும்புகிறேன்
பிரசவ வேதனைக்குப் பின் ஒரு பெண்மையும்
இப்படித்தானாம்!

நான்—
பூக்களுக்கு முத்தமிட்டு பறவைகளோடு பழகுவதில்
எனக்கு மிகமிக ஆனந்தம்
உண்மையிலே எனக்கு இந்த உறவு
உன்னத நிலையில் இருக்கிறது

அமைதிக்காய் அன்றாடம் செயல்படும் பாரதம்
இதன் மானத்தை அன்னியர்க்கு விலைகூவும்
மண்ணின் உயிர்கள்
இதற்கும் மேலே—அன்னிய வல்லரசுகளின்
அணுகுண்டு ஆதிக்கம்

அன்னையின் சேலையை கிழிப்பதற்கு
சொந்த ரத்தங்களையே சுட்டுப்போடும்
நம் சகோதரர்கள் முன்னிலையில்
செத்தும் சாகாத வீர ஆன்மாவை
முழங்கச் செய்தேன்

அருண்மொழி வர்மன் (இராஜராஜ சோழன்)
காலம் தொட்டே
தமிழர்க்கும்—சிங்களத்திற்கும் சிக்கல் தீராதபோது.....
ஒரு கவிஞனின் சிந்தனைச் சித்திரங்கள்
சரித்திரத்தில் குதிக்கும்
உண்மையுடன். ஆம் இதை என்னுடன் தினம் பேசும்
தெய்வீகச் சுடர் எனக்கு எடுத் தியம்பியது.

என்னைப் பற்றிய எழுத்துக்களே நிறைந்தவை
எல்லாம் அநுபவ ஆதாரங்கள்! மலரின் ஓசைகள்!
எப்படியும்—
அர்த்த முள்ள உணர்ச்சிகளை மானுடத்திற்கு
ஊட்டுவதில் கவிஞன் சிறந்தவனே.

எழுத வேண்டும் என்றதும்
எவரஸ்ட் உயரத்திற்கு வார்த்தைகளை
கொட்டிவிடுவதில்
எனக்கொன்றும் அலாதி ஆசையில்லை.
எலுமிச்சை அளவுதான் படைத்திருக்கிறேன்
என்றாலும் – இந்த கலைக்குள்
என் சுயவடிவை பூரணமாய் காணலாம்
உங்களின் அகவழகும் வெளிச்சம் போடும்

நான் நகங்களை வளர்க்கவில்லை
விரல்களைத்தான் எழுதி இருக்கிறேன்
தப்பிருந்தால் எடுத்துச் சொல்ல
திருத்திக் கொள்கிறேன்

ஓர் உன்னதக் கவிஞனின் உயிர் மூச்சில் துளிர்க்கின்ற
ஒவ்வோர் தொடருக்கும் உயிருண்டு
காலம் உருண்டாலும் தான் மட்டும்
கதகதப்புடனே மக்களுக்கு ஒளிபுகட்டும்!

அன்புடன்
**ப. மணி**

**கவிக்கோட்டை**
9-08-1987

## சபதம்

கவித்தாயின் செல்லமகன்
பேசுகிறேன் பாரதி!
உன்னை
கற்சிலையாய் ஆக்கியது
நமது தலைநகரம்
இவ்வாண்டுதான்.

உனது ஏடுகள்
இந்தியை
பச்சை குத்திக்கொண்டு
இருக்குமாயின்
பாரதப் பாவை
பார்த்திருப்பாள் உன்னை!

உன்சிலை வடிக்க
'இந்தி' யாவிற்குக்
கல் கிடைத்ததைப் பற்றி
என்னென்பது.

நீ
சுதந்திரத்தைப்
பாடியதால் தான்
பாரதி(தம்)
உன் பாட்டை
சுதந்திரமாய்
நிராகரித்து இருக்கிறாள்

காற்றே!
ருசியாவிற்கு எனது
வாழ்த்தைச் சொல்லு

**பாரதி!**
**கவித்தாயின் இளைய மகன்**
**கூறுகிறேன்**
**இனி**
**என் பேனாவின் வாசனை**
**எங்கெங்கும் வீசுமடா**

○

16

## காலைப் பொழுதினிலே......

தங்கப்புட்பங்கள்
தரையில்
தவழும் போது
ஆட்டினங்களுக்குத்தான்
எத்தனை எத்தனை
ஆவல்

ஏ
இடையா
உன் பாதச்சுவடு
இங்கே பொய்

தூங்கும் மரம்
தன்
காய்களை எல்லாம்
மண்ணுக்கு
தானம் செய்தபோது......
இந்த
பசுக்கள்
என்னவாய்
சுவைக்கிறது!

17

அடர்ந்த
மரங்களுக் கிடையே
சூரிய ஒளி
நெளிந்து கொண்டிருக்கு

மோசமான
நகரமிது
வாகனங்கள்
கத்திக்கொண்டே இருக்கிறது
இருந்தும்
சின்னச்சின்ன
பறவைகளின்
இங்கித கானம்
இதமாகவே விழுகிறது

○

செல்லாத
இலைகள் மீது
செல்லமாக
படுத்துக் கொண்டேன்
செல்வமாய்
வளரும் இலைகள்
கவரி வீசுது!

இடையே
சலங்கையொலி
நான்
விழியை
திசை திருப்பிய போது
நெஞ்சம்
விடையை தேடி
எங்கே போகிறது?
○

## சாலை அழகு

இரண்டு பக்கமும்
ஹைட்ரஜன் விளக்குகள்
அத்தனையும்
துருவ நட்சத்திரங்கள்
குயில் மட்டும் இங்கில்லை
குரல் கொடுக்க
இரைச்சல் மட்டும்
இருந்து கொண்டே தானிருக்கும்

வாகனத்தின் நெடுமூச்சு
மேகத்தின் தோழிகளால்!
மேனகை இங்குவந்தால்
ஆசையால் துவண்டு போவாள்
வானை நோக்கும் கட்டிடங்கள்
வனப்பான காட்சிப் பொருள்கள்
செயற்கை நீர்வீழ்ச்சி......

பார்த்து கொண்டே தானிருக்கும்
பாதையோர மரங்கள்.

அண்ணல் காந்தியின்
பெயரல்லவோ
அச்சாலைக்கு
அகிம்சா மந்திரம்
அதில் மறைந்திருந்தாலும்
மாதத்திற்கு
ஆறு உயிராவது
இச்சாலையிலே
சிறகை விரிக்கும்

○

## நிழலின் அழகு

நீலக்கடலில்லை—ஆனாலும்
பச்சைநிற......ஏரி
பரந்த அதன் மார்பில்
பதக்கம் தான் தீவு
சுடுகாட்டில் கூட கிட்டாது
இந்த அமைதி

குடை விரித்த மரத்தின் நிழல்
மடி மீது அமைதியாய் படுத்திருக்கிறது
அலைகள் அங்கில்லை......
நிழலுக்கு மூச்சிருக்கா?

மரத்துக்கு பின்புறத்தில்
சூரியன் வரும்போது
நிழல்......முன்னுக்குத் தாவியது
மரத்துக்கு மேலே வந்தான்......
நிழல் மரமாகி விட்டது
சூரியனாலே தொடமுடியவில்லை

என்னே! அந்த நிழல்
அற்புதத்தின் கூம்பு
இதுமட்டும் என்ன
நிழலின் அழகு
நினைவின் பிம்பம்.

○

இந்திய அறிவியற் கூடத்[illegible] பெற்ற கவிதை

89988

## குயில்

இன்பமான கானம்!
என்னே அற்புதம்
இறைவன்
படைத்தமையுள்
தலையாய
சிறப்பு

பாட்டுக்காரியின்
சத்தம் மட்டுமே
செவிகளில்
நீந்துகிறது

அந்த
சாகசக்காரி
எந்த
கிளை இடுக்கில்
சித்து பயில்கிறாள்?

காற்றெல்லாம்
குக்கூ குக்கூ
என்
ரத்தம் கூட
அப்படியே
சப்தம் போடுது

பாட்டுக்கெல்லாம்
பராசக்தி யவள்!
இந்தச்
சின்னவனை
பார்க்க ஏலுமா?

ஓ
லயத்தில் இருப்பார்க்கு
வேறேதும் தெரியாதே
○

## முருகப் பெருமானே!

ராகம் :- தன்யாசி தாளம் :- ஆதி

**பல்லவி**

முருகப் பெருமானே!
முருகப் பெருமானே!

**சரணங்கள்**

பாம்பிடத்தே விடத்தை வைத்து—உடன்
பச்சிலையில் முறிப்பை வைத்தாய்
காணுமி டம்யா வையுமே—பெரும்
தெய்வீக லீலையடா
முருகப் பெருமானே!

முத்தமிழில் கவிதை வித்தை—தினம்
முப்பொழுதும் எமக் களித்தாய்
மூவுலகம் தன்னி லுமே—நான்
காண்ப தெல்லாம் நீயேதான்
முருகப் பெருமானே!

கயவருக்கும் கருணை தந்து—புகழ்
மெய்யருக்கும் அருளை ஈந்தாய்
காண்பரிய பேரொளியே—கவி
காண்ப தெல்லாம் ஏதுசொல்வேன்?
முருகப் பெருமானே!

○

## இரத்தப் பூக்கள்

வசந்த காலம்!

பூமித் திலகமென
புறப்பட்ட சூரியனை
இருள்கிழிக்க
வந்த தலைவனை

நெருப்புக்
குடைபிடித்து
நிர்வாண கோலத்திலா
வரவேற்பது?
அது

இலைகளை எல்லாம்
யாசகம்
செய்துவிட்டு
இரத்தப் பூக்களையே
முண்டாசு
கட்டிய மரங்கள்
ஓ
மே மரங்கள்!

தினக் கூலிகளின்
ரத்தத்தை உறிஞ்சி
மாதச் சம்பளங்களுக்கு

பந்திவைக்கும்
நம் தர்பாருக்கு
சிகப்புக் கொடி
ஒருவனுமே
காட்டியதில்லை

அட
யாரென்ன
செய்தார்கள்?
சிகப்புக் கொடி
பிடித்து
குரூரமாக
நிற்கிறதே

மனிதனுக்கில்லாத
தினவு
மரங்களுக்கு
இருக்கே!

○

## இயற்கைக் கலைஞன்

கருப்பு ஒட்டகம்
படுத்திருக்கிறது
அழகான ஓவியம்!
ஆகாயத்தில்
மேக மையால்
தீட்டப் பட்டிருக்கிறது.
அந்த
உன்னதக் கலைஞன்
யாரோ?

○

## அந்தோ! என் தோழன்

கொய்யா மர நிழலில்
கவிதை வாசித்தேன்
கிளைகளிலே தாவி
கும்மாளம் இட்டார்கள் தோழர்கள்!

திடீரென வெடிச் சத்தம்
அந்தோ!
என் தோழனில்
ஒருவன் இனியில்லை.

வானம் கண்ணீர் வடித்தது
மின் விளக்குகள்
அனுதாபம் காண்பித்தது

போனால் போகட்டும்
குரங்குதானே என்றார்கள்
இந்த(மனித)
குரங்குகள்.

○

## புலம்பல்

1986ம் ஆண்டே!
இன்றிரவு
பன்னிரண்டு மணிக்கு
நீ
தூக்கிலிடப் படுவாய்.

அந்தோ!
ரத்தமெல்லாம் உறைகிறதே.

1987-
என்னென்ன செய்யும்?

எண்ணிக்கையை ஏற்றும்
வரிக்கயிறை திரித்தே
மக்களை இறுக்கும்

அணுவாயுதச் சோதனை
புதுப்புது நோய்கள்
இன்னும் எத்தனை எத்தனை......

காலக் கோர்ட்டே
எப்படியாவது
86ஐ காப்பாற்று.

○

## ஒன்று

வானமும் அவள் கண்ணும்
ஒன்று......
காதல் மழையிலே
அவள் கண்ணில்
மின்னும் செவ்வரிகள்.

* * *

காண்பதெல்லாம்
மண்ணும் விண்ணும்
இடையே
ஊரும் பறக்கும் நீந்தும் நடக்கும்......
பலப்பல அதிசயங்கள்
ஆனாலும் ஆனாலும்
உயிரால் யாவையும்
ஒன்றே!

தாழ்வுக்கும் உயர்வுக்கும்
சமூகத்தில்
மான நீதிச் சட்டம்
ஒன்று தான்!
ஏனோ
மாற்றவோ பரிசீலிக்கவோ
சமூகமும் சரித்திரமும்
சந்திக்க வில்லை
சந்திக்க வைக்கலாம்......

என்
பேனாவும் காகிதமும்
காதல் பேசும்போது
நான் மட்டும்
மௌனம் சாதிப்பதெங்கே?

கச்சைக் கட்டாத
கவிதைப் பெண்
காதல் இச்சைகளை
என்மீது அர்ச்சிக்கிறாள்
முடிவினிலே—
கவிதைப் பெண் எங்கே?
ஓ!
நானும் அவளும்
ஒன்றல்லவோ?

○

## மதமாற்றம்

முழுமுகத்தைக்
காட்டியவள்
முஸ்லீமுக்கு மாறியதும்
முழுசாகவே
மறைத்துக் கொண்டாள்

ஆம்
இந்த கிணறு

மறுபடி
மதம் மாறுமா?
என் முகத்தைக்
காண வேண்டும்.

## தாளம் தப்பல்ல

எட்டிக்காய்
எட்டியே நிற்கிறது
கேட்டேன்
சொன்னது
இனிமை இல்லாத
உங்களிடம்
உறவு
கொள்ளமாட்டோம்.

○

## வள்ளண்மை

சுற்றுலா
சென்ற இடத்தில்
இளசுகள்
கையேந்தி
தொல்லை செய்கிறார்கள்
அவரோ
'கர்ணன்' வேண்டும் என்றார்.
பாரியாக
நினைத்துக் கொண்டேன்
ஆனாலும்
கையைக் கண்ட
என் பை
உதட்டை பிதுக்கியதே!

○

# பசி

காய சண்டிகைக்கு
வெறும்
வயிற்றுப் பசி
இங்கோ—
சொத்துப்பசி
சுகப்பசி
புகழ்ப் பசி......
சாபம் கொடுத்தவனோ
பொய்
பின்
எங்கள் பசி?

○

## முதல் மின்னல்

அந்த
மேடையிலே பேசிய
கொடிதான்
நான்
கண்ட
**முதல் மின்னல்!**

சிகப்புப் பாவாடை
ஒளிசிந்தும்
மஞ்சள் தாவணி

அவள்
கொட்டிய வார்த்தைகள்
வெறும்
பொட்டுத்தான்
என்றாலும்
என் இதயம்
அப்போது தான்
மொட்டலர்ந்தது.

முன்னே
அறிந்ததில்லை
அவள் பெயர்
இப்பொழுது
தெய்வம் தந்த வரம்.

மின்னலோடு
நான் பேச வேண்டும்
மீண்டும் அது
எப்போது வரும்?

**காதல் உதயம்**

சகியே!
போதைச் சரக்கை
வீதியிலே ஒருவன்
கூவாமல் விற்றாண்டீ.

விலை என்ன அறிவாயா?
நெஞ்சத்தை பணமாக்கி
விழிக்குட
மதுவை தந்தாண்டீ.

கொண்டேன்
உறக்க மில்லை
குத்தல் பார்வை
ஏன் உனக்கு?

தோழி!
பணமில்லை என்னிடம்
பதட்டப் படாதே!

○

## அவளின் தோழிகள்

பனிக்கால காலையிலே
தேன் பூக்கள்
கள்ளொழுகும் வாயொடு
சிந்தனையில் லயித்திருக்க
கைவிரலை நீட்டினேன்

மயான அமைதியில்
இனிய சங்க நாதம்.

சலங்கைமாது
பவளப் பெட்டகத்தை
அவசரத்தில் திறந்துவிட்டாள்—

மாணிக்க வரிசைகள்
மலர்களை எல்லாம்
பள்ளி எழுப்பியது.

மண்ணுலகச் சீமாட்டி
மன்னிக்கவும் பறிக்காதீர்கள்
''இவர்கள்
என் தோழியர்கள்''
என்றாளே!

○

திணை : குறிஞ்சி

துறை : காதல் அரும்புவதற்கு காரணமான மலையை; தலைவி தன் மணாளனுக்கு வருகவெனல்.

நெடுமலைப் பருவதமே!
வாழிய நீ.

உனக்கிது தெரிந்திருக்க வேண்டும்.
அன்று உன்
சிங்கங்கண் சுனையில்
நீர்பருக வந்தேன்......

அலையிலே ஒருமகன்
நெளிந்து கொண்டிருந்தான்......

நிழல் நீரை
பருகி விட்டேன்
மலைப் பெண்ணே!
கண் தாமரை கூம்புவதே யில்லை.

அந்த
பசுமைக் காட்சியை
தவிர்த்து
பாவை ஏதும் அறிவதில்லை.

அதோ
ஆவாரம் பூவோடு
வண்டு
ஆனந்த பைரவி
பாடுவதை காண்

நேற்றுவரை
தரையை தழுவிய பூங்கொடி
கொம்பை பின்னிக் கிடக்கிறது
கொள்ளை அழகல்லடீ!

நாதசுரம் கேட்கும்
நாளை நான்கு நாளில்
உனக்குத்தான்
முதல் சேதி
மறவாதேடீ; வந்துவிடு

○

## வெறுத்தவன் குரல்

அழகிய வண்ணத்துப் பூச்சி
தொத்திக் கொண்டது
நெஞ்சின் மீது.

இன்பமான காலம்
உலகம்
என்பதேது?

வண்ணத்துப்பேடு
எனக்குத்தான்
சொந்தமென்று
எண்ணம் கொண்டேன்.

அந்தோ!
ஆகாய வீதியிலே
சிறகை விரித்து
அங்கிருந்த மலரோடு
மையல் விளையாடுதே

உலகே!
பெண்மனம்
இப்படியோ?

## ஆண்பரத்தை

பூவா பூவை
வெறிநாய்கள் தொடர்கிறதே!
காமநீர் தலைக்கேறி
சுத்தபுத்தி சுழல்கிறதோ?
ஆண்மகனா நீர்
மருள் பார்வையை பார்த்தும்
மனம் திறவா உயிர்வாசிகளே!

வீதி விளக்குகள்
ஹைக்கு கவிதை
பாடும் போன்
விபச்சார விழியை
விளக்காக ஏற்றியது ஏது?

உம் நிழலாக நான்
உமக்குத் தெரியாது
பாதுகாப்பு உங்களுக்குத்தான்
அவளுக்கல்ல.

ஆண்மைக்கு எதற்கு
ஆவேச
காமமைப் பூச்சு?

நடமாடும்
நந்தவனத்திற்கு
ஆண்மை வேலியன்றோ?

ஆணவத்தின் சின்னத்தை
ஆண்களுக்குச் சூட்டாதே

மான்வேட்டை
ஆடியவன்
மாவீரன் அல்லை தம்பி!

○

**சரித்திரம் குமுறும்**

**ஒரு ஆவியின் உண்மைக் காதல்**
**உருக்கும் வரிகள்......**

என்
கல்லறையில்
காதுவைத்துப் பார்
உன்
பெயரைத்தான்
அது உச்சரிக்கும்

நீ
கண்ணீர்
சுரக்க வேண்டாம்—
செய்யவும் மாட்டாய்
என்றாலும்
கல்லறையை சுற்றி
பசும்புல்
பாடி மகிழும்.

உன் விழியேட்டை
வாசிக்கும் போது
நீ
என் விதிநூலை
முடித்துவிட்டாய்......

இடுகாட்டுக்கு
வராதே
காற்று உன்னை
தொல்லை செய்யும்

உன்
உடலுக்கு
ஏதாவதென்றால்
கல்லறையும் கலங்குமடி.

**தமிழ்ப் பேராசிரியர்**
**முனைவர் சு. சண்முக சுந்தரம்**

இலக்கிய நாடக
அரங்கில்
கம்பீர வேடம்—
சுந்தர பாண்டியனாய்.

இவர்
உயரத்தில் குள்ளம்
அறிஞர் அண்ணாவும்
அப்படித்தான்.

இலக்கியத்தில்
இனிய சரித்திர ஆய்வில்
இமயம்
இவரைவிட குள்ளம்.

தமிழுக்கு
**இரண்டாம் அகத்தியர்.**

குறிஞ்சிப் பாட்டிசைத்த
கபிலர்—
மலர்களை அடுக்குவதுபோல்
அன்னாரின் விளக்கங்கள்.

சமுதாயமே!
தமிழகத்திலிருந்து
ஒரு காவிரி
கன்னடத்திற்கு வந்திருக்கிறது.

முந்துங்கள்
மூழ்கி
பொருளெடுத்து வாருங்கள்.

**சிறுகதை வேந்தன் க. சமுத்திரம்**

பெருமையல்ல
பொறுமையாகவே சொல்கிறேன்
குமரிக் கண்டத்தின்
தமிழ்ச் சங்கத்தை
சமுத்திரம் கொண்டுவிட்டதாம்....

இன்று
சமுத்திரமே
தமிழுக்கு
சரித்திரம் எழுதுகிறது.

சத்தியத்தின் அழுகையை
துடைக்க முடியவில்லை
நம்மால்...
ஊருக்குள் ஒரு புரட்சி
உருவாகி விட்டது

சமூகமே!
அவன் ஏடுகளில்
பேனா உளியால்
செதுக்கிய சிற்பங்கள்
காலமட்டும் சிரிக்கும்

காதுகளுக்குக்
கதவைப் போடாதே
சமூகச் சேவைக் காரனின்
வார்த்தைகளை
விழியால் தீண்டிப்பார்.

○

## காற்றின் பயணம்

இருவர் போட்ட
கூட்டலின் ''விடையை''
இயற்கை நியதி
மண்ணுக்கு அனுப்பியது.

ஆம்
ஒருவன்
தாய் நாட்டிலிருந்து
மண் நாட்டுக்கு
கடத்தப்பட்டான்.

பருவம் அவனை
மாலை சூடியதும்
பதுமினியின் கண்களிலே
சிறைகண்டான் ......

வீட்டுப் பறவையாய்
சிலநாள்
தன் குஞ்சுகளுடன்
வயித்திருந்தான்.

காலத்தின் சூழ்ச்சியினால்
சாக்காடு
அவனை காதலிக்க
உடலம்
சலனமற்று
சங்கீதம் வாசிக்கும்.

வீட்டிலே கூக்குரல்—
வழக்குத் தொடர்வது எங்கே?
இந்து சொல்கிறது
மறுபடியும் பிறப்பானாம்.

○

## தாலாட்ட வேண்டாம்

அவனை தாலாட்டவேண்டாம்
அவன் விழி
பூத்திருக்கட்டும்
தாமரையென்று
உவமை வேண்டாம்

இருட்டுலகில்
விழித்திருக்க
இப்பொழுதே
பயிலவேண்டும்

உறங்கவைத்தே
இந்தியமும்
இமை கூம்பியிருக்கு
எனவேதான்
அவன்
விழித்திருக்கட்டும்

அவன்
விழியொளியில்
பாரதம்
பிரகாசமடையும்

எத்தனைவகை
இருட்டென்பதனை
இப்பொழுதே
கணக்கெடுக்கும்
அம்மழலையை
தாலாட்ட வேண்டாம்

○

## சுடரில்லா விளக்கு

சுடரில்லா விளக்கு
அந்த
கூட்டுக்கு!

ஒவ்வொரு
அடியையும்
அளந்தே நடக்கிறான்.

அவன்
நிழலாக
நான்
ஏகினேன்

தன்
தடத்திலிருந்து
அவன்
தவறவே இல்லை!

வேண்டிய இடத்திற்கு
வேதனை இன்றியே
சென்றடைந்தான்

தொடர்ந்து போன
நான்
விழுந்ததை
இலக்கெடுத்தால்
விரல்கள்
என்னிடம் குறைவே!

நெஞ்சே!
விழியில்லாத
அவன்
செய்யும் பணியை
நீ
இருந்தும் செய்யவில்லை

ஆதங்கத்தையும்
ஆணவத்தையும்
ரத்து செய்து
பாரேன்!

○

**துளிகாற்று......**

சாரமற்ற சக்கை
அலங்காரம் அபாரம்
சுற்றி இருப்பவர்கள்
கண்களிலே முத்துச்சரம்.

அவன் தீயவனில்லை
ஏனெனில்
'தீமையாம் குடிப்பது'
அதை
ஒருபோதும்
தீண்டாமல் இருந்ததில்லை.

57

நாடி துடிக்கும் வரை
ஆடிப் பார்த்தான்
ரத்தம் உறையும் வரை
அந்தரத்தில்
வாழ்ந்திருந்தான்

தனிமரமாய் இல்லை
அவன்
குடும்பக் காட்டில்
பெரியமரம்.

ஆறு பிள்ளைகளின் தந்தை
ஆனந்தமாய் கிடக்கிறான்—
அழுதவர்கள் கூட
அமைதி யானார்கள்......

அவன் வீட்டு
நாய் மட்டும்
அழுது கொண்டே தானிருக்கிறது.

○

## மௌனியின் ரசிகன்

சிமெண்ணை
விளக்கு விழிக்கு
சீமானைப் போல்
காணப்பட்டான்

மரண அழைப்புக்கு
மனமுவந்தது
சின்ன ஒளி.

இருட்டு
குடிசைக்குள்
அவனது
இதயக்கதவு
மெல்லவே திறந்தது
ஒருமொட்டு
வெடிக்கும் சப்தமாய்

அந்த
கானத்திற்கு
'மெட்டை'
பூட்டுப்போட முடியாது

அவனுக்கு
ரசிகன்
அவனே!

ஆனாலும்
அஃறிணை பல்லிக்கு
ஆனந்தம்
தாளவில்லை.

○

## ஆறாத நோய்

கல்வெட்டே!
நீ
எத்தனையோ
மனிதர்களிடம்
உன் வார்த்தைகளை
வெளிச்சம் போடுகிறாய்

என் நெஞ்சிலே
அவன் தீட்டிய
வார்த்தை நெருப்பை
என் செய்வது?
தண்ணீர் பயன் தாரது.

செல்லாத
சவத்தைக் கூட
செல்லாலே
பேசவைக்கலாம்

அந்த
பொல்லாத
வார்த்தை மட்டும்
நெஞ்சைவிட்டு
நீங்காது
○

## வறுமையின் சட்டம்

எங்கள் வீட்டு
அடுப்பினில்
தணல் பூ
பூப்பதில்லை
இனிமேல்
சாம்பல் பூதான்
பூக்குமாம்.

மண் பானையில்
புனல்
குடி கொள்வதில்லை
புனல்
வைத்து அளந்தல்லவோ
வாங்கிறோம்.

இரவல் புத்தகத்தை
தேர்வுக்குப் பின்
பாதி விலைக்கு விற்பது
கள்ளத்தனமல்ல
**வறுமையின்**
**செங்கோலாட்சி,**

வாடகை வீட்டை
தனதாக்கிக் கொள்ள
வழக்காடும் நிலை
பேராசையல்ல
**இது**
**அரசுக்குப் பாடம்.**

பள்ளிச் சிறுவர்கள்
இரவில்
பிச்சை கேட்பது
யாசகமல்ல
**ஔவையின் வாசகம்**

எங்கள்வீட்டு
அடுப்பினில்
தணல்பூ
பூப்பதில்லை
இனிமேல்
சாம்பல் பூ தான்
பூக்குமாம்.

வறுமைக்கு
வறுமை வேண்டும்
அன்று தான்
வாழ்க்கையும்
வட்டத்துக்குள்
வளம் பாடும்... ..

○

**சத்தமில்லா சங்கீதம்**

மின் விளக்குகள்
எல்லாம்
கண்மூடிய நேரம்

பாதி நிலா
வெளிச்சத்தில்
எத்தனையோ கோடி
நட்சத்திரங்கள்
அபிநயம்
பயில்கிறது.

இந்த
இயற்கை
நர்த்தனத்தை
இமை கொட்டாமல்
பார்க்கும் போது

பூவுடலை
மெல்லத் தீண்டி
கடைத் தெருவை
பவனி வந்த
தென்னகத் தென்றல்
எனக்கு
சேதி தந்திருக்கு

அடியெடுத்து
வைக்கும் போது
மின் விளக்குகள்
சப்தமில்லாமல்
சங்கீதம்
பேசியது.

○

## நெருப்புக் காவியம்

ஈரமான குயில்!
வசந்தங்கள்
வருந்தோறும்
**வண்ணக் குரலெழுப்பும்**

மாங்கனியை
விரும்பியுண்டு
மகரயாழென
பண்மீட்டும் பேடு
கம்பன் காலத்துப்
பாடகி!

இது

மானுடத்தின்
உயர்வு காண
இளைய
சமூகத்தை
சரித்திரத்தில்
பொருத்திடவே......

நெருப்புக் காவியத்தை
தினமும்
வாசிக்கிறாள்!

அந்தச் சாலையில்
நடக்கிறேன்!
தொடராக வருகிறது
பேடின் பாட்டு
விட்டு வாசித்தால்
மனிதனுக்கு
ஒட்டாது போலும்

கவிராயர்களே!
குயிலை
வருணிக்க வேண்டாம்
அதன்
ஓசையை
அசை போடுங்கள்.

தாயகத்தின்
கற்பை
மாற்றானுக்கு
பந்திவைக்கும்
ஜீவனை—

தர்மத்தை
எரித்து விட்டு
சாம்பலில்
உடல் கழுவும்
சமர்த்தர்களை—

சங்கீத நெருப்பில்
சாமரம் வீசி
இங்கித மொழியில்
நெருப்புக் காவியம்
தொடுக்கிறாள்!

**பைத்தியக்காரி**

கொத்து மலருக்கு
பித்து!
கழிநீர் காவிரியில்
கரிசலாங் கன்னியொடு
கானாமுதம்
பேசுகிறாள்.

தாரோடும் வீதியிலே
கால்கள்
தாளமிடாமலே
புகை யுண்ணுகிறாள்

அம்மன் கோவில்
குங்குமத்தால்
அங்கங்கே
சித்திரங்கள்

பொம்மைக்குத் தாலாட்டு
அடடா,
தாலாட்டே
அவளிடம் தான்
கண்டேன்
அனாதைச்சிட்டே!
அவனுக்குத்தான்
பைத்தியம்
நீ
கொத்து மலரன்றோ
கோடிநாள்
வாழ்க:

## வாழ்க பாரதம்!

**தனிநாடு கேட்டு தினம்தினம் பொதுமக்களை பிணங்களாக்கும் பஞ்சாபியர்களை (காலிஸ்த்தான்) விளித்து தேசபக்த வீரன் பகத்சிங் பேசுவது**

பாரதப் பிள்ளைகள்!
வீரச் சிங்கங்காள்!
அன்று—
அன்னியனை ஓட்டவே
தோள் புடைத்தோம்....
அன்னையின் சேலையை
கிழிப்பதற்கா
நீங்கள் வளர்கிறீர்கள்?

உங்களின்
இரத்தப் பின்னணிகளையே
உங்கள் தோட்டாக்கள்
குடைகின்றன!

அமைதியின் மடியிலா
அன்றாடம்
தோட்டாக்கள் சத்தம்
பிணக்குவியல் அர்ச்சனை?

உன் உறுப்புகளை
நீயே
குறைத்துக் கொள்வதில்
என்ன பெருமையோ?

என்னின்
நாட்களில்
அன்னியர்களின் உயிர்
வெடவெடத்துக் கொண்டிருந்தது
நீங்கள்
உங்கள் உயிருக்கே
கண்ணி வைக்கிறீர்கள்.

புண்ணிய கோட்டத்தில்
புண்கள் வளர்க்கிறீர்கள்

பாரதப் பிள்ளைகாள்!
வீரச் சிங்கங்காள்!
பாரதம்
நமது உடமை
இ.:.தை
கிழிப்பதற்கு
யார் எண்ணினாலும்
அவரை
கழிப்பது
நமது கடமை!

முழங்குங்கள்
வாழ்க பாரதம் வாழ்கவே!
○

## துணிவில்லா மனிதர்கள்

வத்திக் குச்சி கூட
வாழ்க்கையில்
'விரக்தி' கண்டது
இல்லை என்றால்
இத்தனை முறை
உரசி உரசி......
சாகும் வரை
ஒரு முறை கூட
துணிவு பிறக்கவில்லையே!

இந்த மனிதர்களுக்கே
தெரியவில்லை
'**உலகின்பக் கேணி**' என்று

O

## தாகம்

மூவர்ணக் கொடி
கேட்கிறது
கேட்கிறது
கண்ணீர்ப் பூக்களை
சிந்திக் கொண்டே

என்னை
ஏற்றாதீர்
ஏற்றாதீர் என்று

அதன் தாகம்
நமக்குத் தெரியுமா?

○

**கலங்காதே நிலவே!**

எண்ணிக்கை இல்லாத
நட்சத்திரப் படைகளை
வைத்துக் கொண்டு
நீ
தேய்ந்து தேய்ந்து
போவதேனோ
வெண்ணிலாவே!

ரீகனின்
ஆகாயப் போர்
நின்னை அச்சுறுத்தியதோ?
கலங்காதே நிலவே
வீறு கொள்.

நான்
போர்ப் பரணி பாடும்
கவிஞனில்லை
தரணிப் பாடுபவன்

அணுவாயுதத்தால்
உன்னை
கற்பழித்துக் கசக்கிப் பிழிந்து,
கூறுபோட்டு
கடலுக்குள் போட்டு விடுவார்களோ?
வேதனையை விடு
வெண்ணிலாவே!

கண்டு பிடிக்கப்பட்ட
அமேரிக்காவை
கனவாக்குகிறேன்

அமைதி நிலவும்
நம்
அகவாழ்க்கை தொடரும்......

## பிரிவை பிரார்த்திக்கிறது

தேசப்படத்தில்
வரையப்பட்ட ரேகைகள்
பாசத்துடன் படர்ந்திருக்கிறது.

மைகொண்டு
தீட்டிய
ரேகைகளா அவை?

மதம் வகுப்பு
மொழிகள்......
மொத்தத்தில்
கண்ணுக்குத் தெரிவது கோடுகள்.

கூடலில்
மகிழ்ந்திருந்த கோடுகள்.
ஊடல் விளையாடி
பிரிவை பிரார்த்திக்கிறது.

வானம்கூட
இந்திய மண்ணை
விவாகரத்து செய்துவிட்டது

ஜீவனாம்சம் கூட
எப்பொழுதோ
ஒருதரம்
வீசிப் போகுது.
○

**கொடிமரத்துக்கு மட்டுமே...**

கொடி மரத்துக்கு மட்டுமே
சுதந்திரம்.
எங்களுக்கோ
சுதந்திரத்திற்கு
பொருள் தெரியாது

ஏன்?

வெள்ளைக்காரனின்
அடக்கு முறையை
இந்திய மக்கள்
இந்தியனிடமே
அனுபவித்து கொண்டிருக்கிறார்கள்......

குழந்தையின் பிறப்பை
பார்க்க வருகையில்
பிணத்தின் வரவேற்பு......
சுதந்திர தினம் தான்
கொடிமரத்துக்கு மட்டும்.

○

## எச்சரிக்கை

எச்சரிக்கை
வல்லரசுகளே உங்களுக்குத்தான்.

அணுவாயுதத்தை
அதிகப் படுத்தி
அமைதியை
குலைக்கும் நாடுகளே!

ஊமை விழிகளில்
உலகத்தை விமர்சிக்கிறீர்கள்.

**தோட்டாக்களுக்குப்**
**பயந்தவையல்ல**
**தோட்டத்துப் பூக்கள்**

கம்ப்யூட்டர்
அறையை வீட்டு
கார்டனுக்கு வாருங்கள்

தென்றலுடன்
சண்டையிடும்
தேன் பூக்களை காண்பீரேல்

உங்கள்
ஆயுதப்போர்
திட்டத்துக்கு
ஆயுசு அதிகமில்லை.

அமைதியாய் வாழுங்கள்......
முருங்கைக் கிளைமீது
ஏன்?
முழக்கம்.
அகிம்சை புளியங்கிளையில்
நாங்கள்
ஆனந்தமாய் ஊசலாடுகிறோம்.
நீங்களும் சுவைக்கலாம்......

## பேனாவின் சாயம்

என்
நாட்டுப்பெண்கள்
அழுது கொண்டே
இருப்பதால்
வானமகள்
காய்ந்து போனாளோ?

இப்பொழுதெல்லாம்
இந்த மண்ணுக்கு
வானமே இல்லை!

ஓயாமலே
அலைகள்
கரைக்கு
முத்தமிடுகிறது
இதனை
பார்த்துப் பார்த்தே
ஆகாயத்தின் விழிகள்
விதவையாய் ஆனது!

நாட்டில்
நெருப்புகளே துளிர்கிறது
இந்த
பேனாவின் சாயம்
அஃதை
சாய்த்துவிட முடியும்?

## அறிமுகம்

தமிழீழம் சுதந்திரம் அடைந்திருக்கு
அஃதை பார்ப்பதற்கு பாரதப்பெண் ஒருத்தி வருகிறாள்
தமிழச்சி அவளுக்கு அறிமுகம் செய்கிறாள்

குட்டிமணியின்
கண்ணொன்று தான்
அந்தச் சூரியன்!

பெண்ணே
பாரதப் பெண்ணே!

அதோ
அத்தனை நட்சத்திரகளும்
ஈழத்தின்
ஆன்மாவே!

இவை
மலைகளல்ல
தளபதிகளின் மார்புகள்!

அஃறிணை மரங்களுக்கு
என்ன தெரியும்
பகைவன்
ஒளிந்து கொள்ள
பாதுகாப்பை தந்தது

தாய் நாட்டுப்
போர்க்களத்தில்
குருதியாற்றின்
படப்பிடிப்பே
அந்திச் செவ்வானம்!

○

## கவிஞனின் உலகம்

மௌனம்
எனக்கு சம்மதம்.
மற்றவர்கள்
கர்வி என்றால்
அதற்கும் இணக்கம்.

மௌனத்தவம்
நான்
வளர்க்கவில்லை......

நான்
சலசலப்பு பேச்சுக்கும்
சாரமற்ற கூக்குரலுக்கும்
சாதி மதம் பார்க்கும்
உயர் திணையா?

இருக்கட்டும்
புத்தகத்தில்
எனை புதைத்து
பொருள் தேடுகிறேன்

மற்றவர்களுக்கு
நான்
அஃறிணையாகவே
விரும்புகிறேன்.

கவிஞனின் உலகம்
அவர்களுக்கெங்கே
புரியும்?

என் பாதையில் ஒரு சுவடு. அதை
எழுத்துப் படம் வரைந்தேன்.
எள்ளளவும் தவறில்லை. அது இது

## மடைமாற்றம்

நான்
கல்லூரி மாணவன்
கட்டாயக் கல்விக்காய்
முட்டாள்
பாடம் படிக்கிறேன்!

இருட்டறையில்
பார்வையுள்ளவனும்
குருடன் தான்!

பசுமைக்ளை
படம்பிடித்து
வார்த்தைகளால்
அரங்கேற்றம்
ஆடிடவே அவா!

தன்னிச்சைக்கு
வளரவிட்டால்
"தூய் முடி"
ஆகாயத்திற்கும்
மேலேதான் இருக்கும்

தெரிந்தும்
மடைமாற்றம்
அட!
என்ன மானுடம்
இது?

யாரென்ன
செய்தாலென்ன
உடைத்த தேங்காயைப்போல்
உள்ளம் இருந்துவிட்டால்
படைத்தவன் கூட
நம்மை
பழுதாக்க முடியாது!
○

## கவிக்கு மட்டும்?

கம்ப்யூட்டர்
வயசுக்கு வந்தும்
நான்
கால் நடையாகத்தான்
எங்கும் போகிறேன்

கம்ப்யூட்டர்
அரசாங்கத்தில்
நான்
'அரசகவி'

எனக்கு மட்டும்
ஏழ்மை
அனுமதிக்கப் படுகிறது?

கவிஞன்
இயற்கையின்
பிள்ளைதானே!

○

**பேனாக் குயில்**

எப்பொழுதும்
என் பேனா
குயில்!

அது
வெள்ளைத் தாளில்
பாடும் சத்தம்
கண்களுக்கு
மட்டுமே
கேட்கும்!

உங்கள்
நெஞ்சை
தொட்டுப் பாருங்கள்
அதன்
சுவடுகள்
பதிவாகி இருக்கும்.

எப்பொழுதும்
என்பேனா
குயில்!

அதன்
வாசம் மட்டும்
ஆன்மாக்களை
வசீகரிக்கும்

குயில்
என்றும்
தன்னைக் காட்டாது!

## இயற்கையும் மௌனி!

என்
அடிமனதின்
மௌன கானத்திற்காய்......

பூக்களுக்கெல்லாம்
கொண்டாட்டம்
செடி கொடிகள்
எல்லாம்
கூத்தாடுது

இசைப்புள்
மகிழ்ந்து போகிறது
இலேசாக
வானமகள்
முத்துக்களை
கொட்டுகிறாள்

என்னே!
என்
வாய்க்குத் தெரியாத
ரகஸ்யத்தை
இவைகள் மட்டும்
எப்படி
புரிந்து கொண்டன?
○

## என் பேனா பேசுகிறது

மூலையில்
என்ன முடக்கம்?
குளிரோடு உறவாடு
அது பின்
உஷ்ணத் தன்மையை அடையும்.

பீடித்துண்டு நெருப்பில்
குளிர் காய்ந்து கொண்டு
வெற்றுச் சிந்தனைக்கு
வேகங் கூட்டாதே!

அதர்மப் போர்வையைக்
கிழித்துவிட்டு
'யாதும் ஊரென' பாடேன்

மானுடனே!
காட்டுமிருகம்
தன்னினத்தை உண்பதில்லை
நீ
அணுவாயுதத்திலே அறிவை
செலவழிப்பது ஏன்?

ஆயுதம் இருந்தும்
அமைதி இன்றிதான்
வாழ்கிறாய்
உன்னால்
அன்பை வளர்க்க முடியுமா?

என் வார்த்தைகளின் வாசனை
இதயத்தை தொடுகிறதா?
அன்பை கடன்வாங்கு.
மிச்சத்தை
அன்று பேசுகிறேன்.

○

## எங்கே நான்

சுள்ளிகளைச்
சேகரித்து
உடலை
சூடேற்றும் மார்கழியில்
காந்த விழி
மின்னல்
என்மேனி யெல்லாம்
தொட்டது.

அந்திச் செவ்வானம்
அடிக்கடி
அழைத்ததினால்
அங்கேயும்
ஒரு முறை சென்றேன்......

கம்பன்
கவியரங்கில்
கவிதையும் காதும்
காதல் பேசும்போதும்
எங்கே நான்?

தேடிக் கொண்டே
இருக்கிறேன்
என்னை நான்

O

## சரி பார்ப்பது தான்......

இயற்கை
என்
தந்திகளை தளர்த்தி விட்டது!

ஓசை
உயரத்திலே பறக்கிறது!
அடடா
இயற்கை
வெட்கப் படுகிறதே!

நான்
இளமை தான்
என்பேனா
கனிந்திருக்கிறது

நடக்கத் தெரியாத
சமூகம்
தட்டிப் பார்க்கிறது....
ஒட்டிப் பார்க்க
ஒருவன்
பிறப்பான்!......

கலங்காது
என் எழுத்தாணி

காலத்தின்
சட்டத்துள்
பேனா
கானம் மீட்டாது
அந்தச் சட்டத்தை
சரிபார்ப்பது தான்
இதன் பணி!

○

## கிழக்கு ஏன் சிவக்கிறது?

என் மக்கள்
சுவாசப்பைகளை தொலைத்துவிட்டு
ஜீவிக்க விரும்புகிறார்கள்!

என் நாட்டில்—
தெருவெல்லாம்
மரங்களின் பிணக்கோலம்
வயக்காடெல்லாம் சுடுகாடாய்!

என் சகோதரிகள்
அழுதழுதே
முகமிழந்து விட்டார்கள்
ஒரு மெழுகு வர்த்தியை போல்!

அடுப்பெல்லாம் மௌனம் வாசிக்க
என் மக்களைச் சுற்றி
நெருப்பு விழா காண்கிறது
ஓ! ஒவ்வொரு வீட்டிலும்
சாதிப் பாம்பு......

காற்றும் சோர்ந்து போயின......
கொடுமைகளை ஒடுக்கிடவே
கிழக்கு கொதித்தெழுகிறது!

○

## அமைதிக்கு சத்தத் தாகம்.

நீண்ட நாளாய் ஆசை
ரோஜா கன்னிக்கு
ஒரு
முத்தம் தர வேண்டும்!

அவள் வீடு தான்
என் கவியுணர்வுக்குக்
கருவறை!

வெள்ளை ரோஜாவுக்கும்
என் கவிதைகளை
போர்த்திக் கொள்ள
கொள்ளை ஆசையாம்
காற்றுச் சேவகன்
காதினில் போட்டான்.

வரம் கிட்டிய
பக்தனாய்
பூவனத்தில் நுழைகிறேன்

கருப்புச் சங்கீதமாம்
வண்டு
என் வெளிச்ச மலரோடு
முத்தமீந்து கொண்டிருக்கு

என்
கருப்புப் பேனா
சில கவிதைகளுக்கு
தாயாகி விட்டது.

மறு நிலையில்—
அவளின்
கற்புக் காவலாம்
முட்கள் உரசிய
என் கரத்தில்
சிகப்பு முத்துக்கள்
சிந்திக் கொண்டிருக்கின்றன

ஓ!
அமைதி இங்கே
போர்முகம் பூண்டது

○

INSTITUT ...
89988
16-7-98



கவிஞர் ப. மணி
தொலை பேசி அலுவலக ஊழியர்.

பெங்களூர் செயின்ட்ஜோசப்
மாலைக் கல்லூரியில்
வணிகவியல் மாணவர்.

கவியுலகில் புதுமொட்டு.

கவிதை வானில்
சிறகு விரிக்கத்துடிக்கும்
இளஞ்சிட்டு.

Library IIAS, Shimla
T 891.481 01 M 314 M
00089988